[9th September 1959

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே குறிப்பிட்டதாக நான் கூறவில்லை. அமைச்சர் அவர்கள் கூறினதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது சட்டமன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கு இதில் அக்கறை குறைவாகத் தான் இருக்கும் என்று குறிப்பிடுவது சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாக ஆகாதா என்பதைத் தான் கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இதைப்பற்றி சொன்ன பிறகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதை கேட்டதில் ஒரு தவறு மில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அதற்குப் பிறகும் கனம் அங்கத் தினர் அதைப்பற்றி திரும்பிச் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம் ? I said there was no insinuation.

SRI A. VEDARATHNAM : இந்தக் குழு சில ஜில்லாக்களில் மட்டும் தான் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். மற்ற ஜில்லாக்களிலும் இந்தமாதிரியான குழுக்கள் எப்போது ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தஞ்சை ஜில்லாவிலும், கன்னியாகுமரி ஜில்லாவிலும் தான் இது ஏற்படுத்தப்படவில்லை. வேறு எல்லா இடங்களிலும் அமைத்தாகி விட்டது. இந்த இரண்டு ஜில்லாக் களிலும் எப்போது அவசியமோ அப்போது அமைக்கப்படும்.

Gratuity for workers

*238 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள், என்ஜினியரிங் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், சிமிட்டி தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு "கிராஜுடி" கொடுப்பதைச் சட்டமாக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், அதற்குரிய மசோதா எப்போது கொண்டுவரப் படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Road-rail crossings

239 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ரெயில்வே பாதைகளும், ரஸ்தாக்களும் சந்திக்கும் இடங்களில் ரஸ்தா போக்குவரத்திற்கான மேல் பாலங்களும், கீழ் பாலங்களும் சென்னை ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களில் கட்டப்படவேண்டும் என்று தெரிவிக்கும் ஜாபிதா ஒன்றைத் தயாரித்து மத்திய அரசாங்கத்திற்குச் சென்னை அரசாங்கத் தார் அனுப்பியிருக்கிறார்களா ?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. In 1955, a list of 45 road-rail crossings (arranged in the order of priority) to be replaced by over/under bridges was forwarded to the Government of India.

9th September 1959]

(*b*) Out of these 15 road-rail crossings, an overbridge has already been constructed on McNicholls Road (near Chetput Railway Station). During the current year it is proposed to take up the work of construction of an overbridge on Lighthouse (Springhaven) Road. The further programme of works to be taken up during 1960–61 and in the Third Five-Year Plan is under consideration.

MR. SPEAKER : We can take up question No. 253-A also; it is on a similar subject by the hon. Member Sri Vinayakam.

Railway level-crossings in the City

* 253-A *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) how many railway level-crossings are there in the City of Madras, where it is proposed to construct overbridges;

(*b*) when the work of constructing overbridge at the railway level-crossing of Kodambakkam would be taken up; and

(*c*) what is the estimated cost and in what proportion would the same be met by the Government of India and the Government of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Six level-crossings, Sir.

(*b*) The question whether the work relating to the construction of an overbridge in lieu of the level-crossing near the Kodambakkam Railway Station can be taken up in 1960–61 is under consideration.

(*c*) The cost of construction of approaches to the overbridge at Kodambakkam level-crossing is estimated at Rs. 20 lakhs. This will be shared equally by the Staae Government and the Corporation of Madras (i.e., Rs. 10 lakhs by the State Government and Rs. 10 lakhs by the Corporation of Madras). The cost of construction of the overbridge proper will have to be borne by the Government of India.

SRI P. G. MANICKAM : ஸார். மேற்கண்ட திட்டங்கள் சென்னை நகருக்கு மட்டும்தான் போடப்பட்டிருக்கிறதா ? அல்லது மற்ற நகரங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா ? விஸ்தரிக்கப்படும் என்றால், அதனுடைய விவரங்கள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளியூர்களிலும் இந்தத் திட்டம் நடத்தவேண்டும் என்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் இப்போது நாலைந்து திட்டங்களை முதன்மையாக எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று மதுரைப் பக்கம் திருப்பரங்குன்றத்திற்குப் போகும் வழியில் அதாவது, மதுரை—திருநெல்வேலி ரோடில் சுப்பிரமணியபுரம் பக்கத்தில் இந்த வேலையை மேற்கொள்ளுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.